DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :**PW - 41**

| | | |
|---|---|---|
| Name | : Dr.சுப்ரமணியன் | Caste: |
| Father Name: | திரு.முருகன் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 4th day of March -2024.

**A1 to A3, A5, A7, A9, A13, A15, to A18 present. A6, A8, A11 & A14 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed.**

**04.03.2024**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சி மாவட்டம், திருச்சி கி.ஆ.பெ.விஸ்வநாதம் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் பொது மருத்துவபிரிவில் இணை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 16.05.2008 அன்று தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில் அவசரசிகிச்சை பிரிவு மருத்துவராக பணிபுரிந்தேன். அன்றைய தினம் மாலை 6.40 மணிக்கு நான் மேற்படி மருத்துவமனையில் அலுவலில் இருந்தபோது சுமார் 40 வயது மதிக்கத்தக்க அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் தாலுக்கா, வங்குடி மேலத்தெருவை சேர்ந்த காசிநாதன் என்பவரது மனைவி ஜானகி என்பவர் எங்களது மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டுவரப்பட்டார்.

அவர் முதலில் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டுசெல்லப்பட்டு பின்னர் மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு

மருத்துவமனைக்கு ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டு நகலுடன் கொண்டுவரப்பட்டார். அவரை நோயாளியின் சகோதரியான சரோஜா என்பவர் அழைத்து வந்தார்.

நோயாளியை பரிசோதித்த போது அவர் சுயநினைவுடனும், சீரான நாடித்துடிப்பு மற்றும் ரத்த அழுத்ததுடன் காணப்பட்டார். பேசும் தன்மையுடன் காணப்பட்டார். நோயாளின் இடதுபுற தோள்பட்டை, இடதுபுற முன்னங்கை மற்றும் தலைபகுதி ஆகிய இடங்களில் நுண்கதிர் படம் எடுப்பதற்கு பரிந்துரைத்தேன். அவரை வார்டு எண்.5, அறுவைசிகிச்சை பிரிவு எண்.5 இல் உள்நோயாளியாக அனுமதித்தேன்.

ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் மேற்படி நோயாளியை பொறுத்து வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டு எண்.11194182. தஞ்சை மருத்துவகல்லூரி மருத்துவமனையில் மேற்படி நோயாளியை பொறுத்து பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டிற்கு முன்பாகவே மேற்படி நோயாளியை பொறுத்து ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் விபத்து பதிவேடு பதிவு செய்யப்பட்டுவிட்டதால் என்னால் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டு நகலில் நோயாளியின் உடலில் ஏற்பட்ட காயங்கள் குறித்து நான் தனியாக பதிவு செய்யவில்லை.

என்னால் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ.52. அந்த விபத்துபதிவேட்டு நகல் சம்மந்தப்பட்ட புத்தகத்தை நான் இன்று இந்நீதிமன்றத்திற்கு கொண்டுவந்திருக்கிறேன். அந்த புத்தகத்தில் என்னால் பதிவு செய்யப்பட்ட விபத்துபதிவேட்டின் அசல் மற்றும் Duplicate நகலும் உள்ளது. Duplicate நகலுடன் மேற்படி நோயாளியை பொறுத்து ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டு நகல் இணைக்கப்பட்டுள்ளது. அந்த விபத்து பதிவேட்டு நகல் முக்கிய ஆவணம் என்று நீதிமன்றம் கருதுகின்ற காரணத்தினால் சாட்சியின் அனுமதியுடன், மேற்படி விபத்து பதிவேட்டு நகல் நீதிமன்றத்தால் குறியீடு செய்யப்படுகிறது. அது நீ.ம.சா.ஆ.1. ( மேற்கண்ட 2 ஆவணங்களும் எதிரிகள் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது.). இந்த வழக்கு சம்மந்தமாக காவல்துறையினர் என்னை விசாரிக்கவில்லை.

**1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கவேண்டுமென்று நீதிமன்ற அழைப்பாணையானது என்னால் 28.02.2024 அன்று எனக்கு வழங்கப்பட்டது. எந்த விபத்து பதிவேட்டு நகல் சம்மந்தமாக நான் நீதிமன்றத்தில் சாட்சி சொல்லவேண்டுமென்று அந்த அழைப்பாணையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அந்த சம்மன் எனக்கு வழங்கப்படுவதற்கு முன்பே போலிசார் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு நான் ஒரு கொலை வழக்கு சம்மந்தமாக சாட்சி சொல்லவேண்டுமென்று என்று சொல்லி நான் தற்போது நீதிமன்றத்தில் ஒப்படைக்கும் ஆவணத்தை வாட்ஸ்அப் மூலமாக எனக்கு அனுப்பி வைத்தார்கள். அதைபார்த்து தான் நான் தற்போது நீதிமன்றத்திற்கு கொண்டுவந்திருக்கும் விபத்து பதிவேட்டு புத்தகத்தை கொண்டுவந்திருக்கிறேன். அந்த ஆவணம் நீ.ம.சா.ஆ.2.

**13– ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

மேற்படி நோயாளி ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது அவரது உடல்நிலை எப்படி இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நோயாளி எங்களது மருத்துவமனையில் 16.05.2008 அன்று மாலை 4.00 மணிக்கு அனுமதிக்கப்பட்டார் என்றால் தவறு. மேற்படி நோயாளிக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மை தொடர்பாக நான் சான்று எதுவும் வழங்கவில்லை.

**மற்ற எதிரிகள் தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையானது ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

Sd/– G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.